

# பரலோகக் குடியிருப்பு

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** பிலி 3:17–4:23; 1 கொரி 15:42–44; யோவான் 14:27; சங் 119:165; யோபு 1:21; 1 தீமோ 6:7.

**மனன வசனம்:** நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். பிலிப்பியர் 4:6.

இந்த வாரத்துடன் பிலிப்பியர் நிருபத்தின் ஆராய்ச்சி முடிகிறது; அதில் மதிப்புமிக்க பாடங்களும், அனுதின வாழ்வுக்கான ஒழுக்கவிதிகளும் அடங்கியுள்ளன. பவுல் அப்போஸ்தலரின் வாழ்க்கைக்கு வழிகாட்டிய ஒழுக்க விதிகள் அந்நிருபத்தின் இறுதி வசனங்களில் காணப்படுகின்றன. இயேசு உள்ளான மனிதனை முக்கியப்படுத்தி போதித்ததுபோல, பவுல் மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்வுக்கு உதவுகிற கருத்துகளைப் போதிக்கிறார்.

பெரும்பாலும் நாம் நினைப்பதுபோல நடக்காவிட்டாலும்கூட, நாம் கவலையோ பதற்றமோ அதைரியமோ அடையவேண்டியதில்லை. மாறாக, வாழ்க்கை சவால்களைச் சந்திப்பதற்கு தேவையான உள்ளான பெலத்தைக் கண்டுபிடிக்க உதவுகிற நியதிகள் உள்ளன; அவற்றின்மூலம் தேவன்மட்டுமே கொடுக்கக்கூடிய நிலையான, நீடித்த சமாதானத்தை நாம் அனுபவிக்கலாம். நிகழ்காலமும் எதிர்காலமும் அவரது கரங்களில் உள்ளன, நமக்கு தேவையான அனைத்தையும் அவர் கொடுப்பார்.

முக்கியமாக, உலக அரசாங்க முறைகளில் நாம் நம்பிக்கைவைக்க வேண்டியதில்லை, அதில் நமக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள். அந்தக் குடியுரிமையில் அற்புதமான சிலாக்கியங்களும், பொறுப்புகளும் உண்டு.

*2026, பெப்ரவரி 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# முன்மாதிரிகள்

சிலரைப் பார்த்து பிரமித்து, அவர்களைப்போல வாழவேண்டும் என்கிற ஆசை எழுவது சகஜம். சிறுவர்களுக்கு நல்ல முன்மாதிரிகள் அவசியம். அது அவர்களது தாய் அல்லது தந்தையாக இருப்பது நல்லது. வளரும்போது வேறு நபர்களை முன்மாதிரிகளாகப் பார்ப்பார்கள். அது அவர்கள் தேர்வுசெய்கிற வேலை சம்பந்தப்பட்ட நபர்களாக இருக்கலாம்; அல்லது அவர்கள் வாசித்த சுயசரிதைகளிலுள்ள நபர்களாக இருக்கலாம். சவால்களை எதிர்கொண்ட வேதாகம நபர்களின் வாழ்க்கை அனுபவங்களை வாசித்து, தங்களது அனுபவங்களுடன் ஒப்பிடலாம்.

ஆனால் இன்றைய ஊடகங்களில் மோசமான முன்மாதிரிகளே அதிகம் இருக்கிறார்கள். ஏமாற்றுகிற தலைப்புகள் இருக்கும்; உள்ளே சென்றால் சிற்றின்பத்தைத் தூண்டுகிற, பிரபலங்களுடைய வாழ்க்கைகுறித்த ஏறுமாறான செய்திகள் இருக்கும். பிலிப்பிய விசுவாசிகளின் காலத்தில் இணையதளம் இல்லை; ஆனாலும் இதுபோன்ற சவால்களைச் சந்தித்தார்கள்.

பவுல் வாழ்ந்த காலக்கட்டம் இன்றைய உலகம் போலவே மிகவும் சீர்கெட்டு, ஒழுக்கமற்று, தீயதாக இருந்தது. எப்போதுமே தீமைக்கு பஞ்சம் இருக்கப்போவதில்லை. ஏன் முடிவுமட்டும் அந்த நிலைதான். அதற்கு நம்முடைய எதிர்வினை என்ன என்பதே கேள்வி.

**பிலி 3:17-19இல் நல்ல முன்மாதிரிகளும், மோசமான முன்மாதிரிகளும் எவ்வாறு விவரிக்கப்படுகின்றனர்? அவர்களை வேறுபடுத்திக் காண்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள வழிகள் என்ன?**

தனக்கு உடன்பாடில்லாத நபர்கள்மீதும் பவுல் அன்புகாட்டினார் - அவர்களுக்காக கண்ணீர் விடுகிறார்! அவர்களை தன் எதிரிகள் என்று சொல்லாமல், ‘கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்’ என்கிறார். பிலி 3:18. சிலுவை சார்ந்த விஷயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. பிரிவினைச் சுவர்களை சிலுவை உடைக்கிறது, இரட்சகர் தேவைப்படுகிற பாவிகளாக அனைவரையும் சமநிலையில் வைக்கிறது. எபே 2:11-14.

கெட்ட முன்மாதிரிகளை அல்ல, நல்ல முன்மாதிரிகளைப் பார்க்குமாறும், தன்னைப்போல வாழ்கிறவர்களின் வாழ்க்கையை உற்றுநோக்குமாறும் பிலிப்பியரை வலியுறுத்துகிறார். ரோம விசுவாசிகளையும் இதேபோல பவுல் எச்சரித்ததைக் கவனியுங்கள், ‘நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டும்.’ ரோமர் 16:17. ரோமிலிருந்த வஞ்சகர்களை ‘நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்தவர்கள்’ என்கிறார். ரோமர் 16:18.

---

**இயேசுமட்டுமே பரிபூரண முன்மாதிரியாக இருந்தாலும், ஒரு சில விஷயங்களில் நல்ல முன்மாதிரிகளாக இருக்கிறவர்கள் உண்டு. அதேநேரம், நீங்கள் மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட முன்மாதிரியாக இருக்கிறீர்கள்?**

# ‘கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்’

**கிறிஸ்தவ ‘குடியுரிமையின்’ தன்மைபற்றி பவுல் எவ்வாறு தெளிவாக விவரிக்கிறார்? பிலி 3:20,21.**

சிலுவைக்கு பகைஞர்கள் ‘பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்,’ தங்கள் வயிறுகளைத் தாண்டி அவர்கள் யோசிப்பதில்லை. பிலி 3:19. கிறிஸ்தவக் குடியுரிமை பரலோகத்தில் இருக்கிறது, இயேசு கிறிஸ்துதாமே நம்முடைய ஆட்சியாளர். அந்தக் கருத்தை வலியுறுத்தும்படிக்கு, வியாதிக்கும் அழிவுக்கும் மரணத்திற்கும் உட்பட்ட ‘நம்முடைய அற்பமான சரீரம்’ உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிமையான சரீரத்தைப்போல மறுரூபமாக்கப்படவிருப்பதாகச் சொல்கிறார். பிலி 3:21.

**அந்த மகிமையான நிலைபற்றி பின்வரும் வசனங்கள் எவ்வாறு விவரிக்கின்றன?**

**யோபு 19:25–27** ____________________

**லூக்கா 24:39** ____________________

**1கொரி 15:42–44** ____________________

**1கொரி 15:50–54** ____________________

**கொலோ 3:4** ____________________

முடிவில், ‘கடைசி சத்துருவாகிய’ மரணமும் இயேசுவின்மூலம் அழிக்கப்படும். 1கொரி 15:26. மரணத்திற்கு முடிவு கட்டப்படுவது மட்டுமல்லாமல், ஒரு புதிய ‘மகிமையான சரீரம்’ கிடைக்கும்; அதுதான் இயேசுவில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய நம்பிக்கை, இறுதி வாக்குறுதி. பிலி 3:21.

தேவனில்லாமல் எவ்வாறு ‘இரட்சிப்பு’ பெறலாம் என்கிற ஒரு புத்தகத்தில், மரணப்பயத்தை மேற்கொள்வதே ‘இரட்சிப்பு’ என்று உள்ளறிவு இல்லாமலேயே சொல்கிறார் அதன் ஆசிரியர் லக் ஃபெர்ரி. அதே சமயம் கிறிஸ்தவ மார்க்கம்பற்றிய ஓர் உண்மையை அறிக்கையிடுகிறார். ‘மரணப்பயத்தை நாம் மேற்கொள்ள உதவுவது மட்டுமல்லாமல், மரணத்தை மேற்கொள்ள கிறிஸ்தவம் நமக்குத் திறனளிக்கிறது. அம்மார்க்கம் பொதுவாக அல்லது கருத்துக்காக அவ்வாறு போதிக்காமல், தனிமனித அடையாளத்தின் அடிப்படையில் அதைப் போதிப்பதால், அதுதான் அழிவுள்ள நம் நிலையிலிருந்து அழியாமை என்கிற வெற்றியான நிலைக்கு வழிசொல்கிற உண்மையான பதிப்பாக இருக்கிறது.’[1] இது நாத்திகர் ஒருவர் ஒத்துக்கொள்கிற உண்மை.

எனவே, நம் பரலோகக் குடியுரிமையில், உயிர்த்தெழுதல்குறித்த வாக்குறுதியும், இப்போது நம்மால் கற்பனைகூடபண்ணிப் பார்க்கமுடியாத நித்திய வாழ்வும் அடங்கியிருப்பதாக பவுல் சொல்கிறார்.

[1] Ferry, A Brief History of Thought (New York: HarperCollins, 2011, Kindle edition), p. 90.

---

**நம் விசுவாசம் அனைத்திலும், நித்திய வாழ்க்கை குறித்த வாக்குறுதி ஏன் மிகமுக்கியமானதாக இருக்கிறது? கிறிஸ்து நமக்குத் தருவதைவிட அதிகமான பயனுள்ள ஒன்றை இந்த உலகத்தால் நமக்குத் தரமுடியுமா?**

# கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள் - எப்பொழுதும்

**நாம் எவ்வாறு 'தேவ சமாதானத்தை' அனுபவிக்கவேண்டும்? பிலி 4:4-7.**

---

---

பிலி 4:1-3இல், ஒற்றுமையின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்திவிட்டு, கர்த்தருக்குள் சந்தோஷமாக இருங்கள் என்கிற அடுத்த கருத்தை பவுல் சொல்கிறார். பிலி 4:4-7.

இறுதியில் ஒன்றுமில்லாமல் போகிற விஷயங்கள்குறித்து எத்தனை முறை அதிக மன அழுத்தத்துடன் இருந்திருப்பீர்கள்? நாம் கவலைப்படக்கூடாது என்று இயேசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். மத் 6:25-34; 10:19. கர்த்தர் நம்மை 'விசாரிக்கிறவரானபடியால்' நம் கவலைகளையும் பயங்களையும் அவர்மீது வைத்துவிடலாம் என்று பேதுரு சொல்கிறார். 1பேதுரு 5:7. உலகம் முழுவதிலும் அதிகரித்து வருகிற பிரச்சினைகளால் கர்த்தருடைய வருகை சமீபம் என்கிற நம்பிக்கை நம்மில் உறுதியாகவேண்டும். மத் 24:33; லூக் 21:28; யாக் 5:8.

எதற்கெடுத்தாலும், எந்தச் சூழ்நிலைகுறித்தும் கவலைப்படுவதைப் போக்குவதற்கான மருந்து விசுவாசமான ஜெபம்தான். பிலி 4:6,7. நாம் ஜெபித்த காரியம் நடப்பதற்கு முன்னரே அது நடந்துவிட்டதுபோல விசுவாசித்து, செயல்படவேண்டும்; அதனால்தான் நாம் 'ஸ்தோத்திரத்தோடே' ஜெபிக்கவேண்டுமாம். மேலும் நம் கட்டுப்பாட்டை மிஞ்சின, அவசரமான சூழ்நிலைகளில் 'வேண்டுதலுடன்' ஜெபிக்கவேண்டும்; **டீஸிஸ்** என்கிற கிரேக்க வார்த்தை அதைச்சுட்டிக்காட்டுகிறது. லூக் 1:13; பிலி 1:19; 1தீமோ 5:5, யாக் 5:16. நம் ஜெபங்கள் 'வேண்டுதல்கள்'தாம்; ஆனால் 'அவருடைய சித்தத்தின்படி' கேட்போமானால், நம் விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கப்பட்டதாக அறியலாம். 1யோவான் 5:14. நம் விண்ணப்பங்கள் தேவனுடைய கரங்களுக்குச் சென்றதாக நாம் இளைப்பாறுதலும் சமாதானமும் அடையலாம்.

**தேவனுடைய சமாதானம்பற்றி நாம் அதிகம் புரிந்துகொள்ள பின்வரும் வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன? சங் 29:11; ஏசா 9:6; லூக் 2:14; யோவான் 14:27; 1கொரி 14:33.**

---

தேவசமாதானமானது உலகம் கொடுக்கமுடியாத ஒன்று; ஏனென்றால், நம் இரட்சகராகிய இயேசுவின்மூலம் நாம் நித்திய ஜீவனாகிய ஈவைப் பெற்றிருக்கிறோம் என்கிற நிச்சயத்தால் தேவசமாதானம் கிடைக்கிறது. ரோமர் 5:1; 6:23. இந்தச் சமாதானம் நம் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது; அது 'எல்லாப் புத்திக்கும் மேலானது.' பிலி 4:7. புத்தி என்பதற்கு **நவ்ஸ்** என்கிற கிரேக்க பன்மைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதால், அதை சிந்தையால் மட்டுமே புரிந்துகொள்ளமுடியாது என்பது தெரிகிறது.

---

**'தேவ சமாதானத்தை' அனுபவிப்பதுபற்றி ஒருவருக்கு எவ்வாறு விளக்குவீர்கள்?**

# அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள் ...

எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம் 'உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.' பிலி 4:7. நம் உள்ளான வாழ்க்கைக்கு பாதுகாப்பு தேவை. தேவ சமாதானம் சம்பந்தமாக இராணுவ உருவகம் ஒன்றை பிலி 4:7 பயன்படுத்துகிறது. அங்கு வருகிற **ப்ரோவ்ரியோ** என்கிற கிரேக்க வினைச்சொல், ஒரு பட்டணத்தை எதிரிபடையினர் பிடித்துவிடாமல் படை வீரர்கள் பாதுகாத்து நிற்பதைச் சுட்டிக்காட்டுகிறது. 2கொரி 11:32; அப் 9:24.

தேவ சித்தத்திற்கு இணங்கி வாழ்வதாலும் உள்ளான சமாதானம் கிடைக்கிறது. 'உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.' சங் 119:165.

**என்னென்ன செயல்களைச் செய்யும்படி பவுல் வற்புறுத்துகிறார்? பிலி 4:8,9.**

பிலி 4:8,9 வசனங்களை 'கடைசியாக' என்று பவுல் துவங்குகிறார்; ஆறு நற்பண்புகளைப் பட்டியலிடுகிறார்; இறுதியாக அவற்றின் சுருக்கத்தைச் சொல்லி, தன் முன்மாதிரியைப் பின்பற்றுமாறு ஊக்குவிக்கிறார். வெவ்வேறு கலாச்சாரங்களுக்கு பொருத்தமான இந்த இறுதி அறிவுரை, பிலிப்பியின் கிரேக்க-ரோம கலாச்சாரத்திற்கும் பொருந்துகிறது; ஏனென்றால் அந்தக் கலாச்சாரமும் நற்பண்பையும் முன்மாதிரியையும் வலியுறுத்தியது. ஆனால் பவுலின் முழுகவனமும் வேதாகம நற்பண்புகளில் இருப்பதால், விவேகம், நியாயம், இச்சையடக்கம், தைரியம் ஆகிய நான்கு முக்கிய கிரேக்க நற்பண்புகளைக் குறிப்பிடவில்லை.

1. **உண்மையுள்ளவைகள்.** வேதாகமத்தின் முக்கிய நற்பண்பாகிய சத்தியத்துடன் பட்டியல் துவங்குகிறது. 'மெய்யாகவே சொல்கிறேன்' என்று இயேசுவும் கூட பல இடங்களில் சொல்லியிருக்கிறார்; புதிய ஏற்பாட்டிலும் அநேக இடங்களில் வலியுறுத்தப்படுகிறது. அப் 26:25; ரோமர் 1:18; 1 கொரி 13:6; 2 கொரி 4:2; எபே 4:15; 1 தீமோ 3:15; யாக் 1:18; 1 பேதுரு 1:22; 1 யோவான் 2:21.
2. **ஒழுக்கமுள்ளவைகள்.** இதற்கான கிரேக்க வார்த்தை, தனிநபர் நற்குணத்தைக் குறிக்கிறது. 1தீமோ 3:8,11; 'மதிப்புக்குரிய' என்று தீத்து 2:2இல் உள்ளது (சமகால மொழிபெயர்ப்பு).
3. **நீதியுள்ளவைகள்.** தேவனுடைய நீதியான குணம். பிலி 1:7 இல் 'சரியானது' என்று வருகிறது. சமகால மொழிபெயர்ப்பு.
4. **கற்புள்ளவைகள்.** விசுவாசத்தால் தேவனுடைய நீதியை ஏற்றுக்கொள்வதால் புறப்பட்டு வருகிற எண்ணமும் செயலும். 1யோவான் 3:3.
5. **விரும்பத்தக்கவைகள்** (பொது மொழிபெயர்ப்பு) - தேவனுடைய சிருஷ்டிப்பு முழுவதிலும் காணப்படுகிற அழகுணர்வு சார்ந்தவை.
6. **நற்கீர்த்தியுள்ளவைகள்** - 'பாராட்டுக்குரியவை' (பொது மொழிபெயர்ப்பு).

இவற்றிற்கு அஞ்ஞான அர்த்தம் எதையும் கற்பிக்கக்கூடாது என்பதற்காக, 'புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ' என்று மேலும் இரண்டு தகுதிகளை பவுல் பட்டியலிடுகிறார். பிலி 4:8. இந்தப் பரலோக நற்பண்புகளையே நாம் யோசித்துக் கொண்டிருக்கவேண்டும். பிறகு, இதில் எழுகிற சந்தேகங்கள், தவறான புரிதல்களை அகற்றுகிற வகையில், தன் வாழ்க்கையில் கற்று, பெற்று, கேள்விப்பட்டு, பார்த்தவற்றைச் செய்யும்படி கூறுகிறார். பிலி 4:9.

# மனரம்மியமாயிருக்க முக்கிய வழிகள்

**மனரம்பியமான வாழ்க்கைக்கு பவுல் சொல்கிற முக்கிய வழிகள் என்ன? பிலி 4:10-13, 19.**

பசி, நோய், படுகாயம், இழப்பு போன்ற படுமோசமான சூழ்நிலைகள் தாக்கும்போதுதான், உண்மையிலேயே முக்கியமான விஷயங்களை யோசிப் போம். நாம் அற்பமாக எண்ணின ஆசீர்வாதங்களைச் சிந்திப்போம். நாம் 'தாழ்ந் திருக்கும்போது', 'ஏழ்மையில் இருக்கும்போது'தான் விசுவாசத்தின் முக்கியத் துவம் புரிய ஆரம்பிக்கிறது. பிலி 4:12, எளிய மொழிபெயர்ப்பு.

மாறாக, 'செல்வம் இருக்கும்போது' (பிலி 4:12, எளிய மொழிபெயர்ப்பு), அது எப்போது வேண்டுமானாலும் மறையலாம் என்கிற உணர்வு இருக்கவேண் டும். நீதி 23:5. நாம் பிறக்கும்போது இந்த உலகத்தில் ஒன்றும் கொண்டு வந்த தில்லை, கல்லறைக்கு ஒன்றையும் கொண்டுப்போவதுமில்லை. யோபு 1:21; 1தீமோ 6:7. பின்வரும் வேதாகம வாக்குறுதிகளைச் சிந்தியுங்கள்:

- சங் 23:1 - 'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.'
- மத் 6:32 - 'இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.'
- 1பேதுரு 5:7 - 'உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.'
- பிலி 4:19 - 'என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை யெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.'

'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு' பிலி 4:13. 'எல்லாவற்றையும்' என்பதில் என்னவெல்லாம் அடங்கும் என்பதை முற்றிலும் அறிந்தவர் எவருமில்லை. ஆனால், தேவனு டைய உதவியையும் பெலத்தையும் வேண்டும்போது, அவருடைய சித்தத்தின் படி கேட்கவேண்டும். தேவனுடைய சித்தமென அறிந்திருக்கிற விஷயங்களைக் கூட பெரும்பாலும் நாம் கேட்பதில்லை. அதனால்தான் 'நீங்கள் தேவனிடம் கேட்டுக்கொள்ளாததால் எதையும் பெறுவதில்லை' என்று யாக் 4:2 சொல்கிறது. (எளிய மொழிபெயர்ப்பு).

பின்வரும் சில விஷயங்கள் முற்றிலும் தேவ சித்தத்திற்கு உட்பட்டவை என்பதால் நாம் நம்பிக்கையோடு கேட்கலாம்:

- நமக்கு பிரியமான ஒருவரின் அல்லது ஒரு நண்பரின் இரட்சிப்பு. 1தீமோ 2:3,4.
- நம் விசுவாசத்தைப் பகிர்வதற்கான தைரியம். வெளி 22:17.
- அறிக்கையிட்டு, தவறுகளை விட்டுவிடும்போது கேட்கிற மன்னிப்பு. 1யோவான் 1:9.
- தேவ கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதற்கான பெலம். எபி 13:20,21.
- நம்மை வெறுத்து, மோசமாக நடத்துகிறவர்கள்மீது அன்பு. மத் 5:44.
- சவாலான சூழ்நிலைகளில் ஞானம். யாக் 1:5.
- வேதாகம சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கான அறிவு. யோவான் 8:32.

---

**நீங்கள் ஜெபித்தும் பதில்கிடைக்காத அல்லது பதில் கிடைக்காமலேயே போகிற விஷயங்களை எவ்வாறு கையாளுகிறீர்கள்?**

# மேலும் படிக்க:

‘புதிதுபுதிதாக கிருபையை தொடர்ந்து பெறுகிறவர்கள்மட்டுமே, தங்கள் அனுதின தேவைக்கேற்ற வல்லமையையும், அதைப் பயன்படுத்துவதற்கான திறனையும் பெறமுடியும். எதிர்காலத்தில் ஊற்றப்படப்போகிற விசேஷித்த ஆவிக்குரிய வல்லமையால், ஆத்தும ஆதாயப்பணி செய்வதற்கு அற்புதமாக நாம் தகுதிபெறுவோம் என்று எதிர்பார்க்காமல், தேவ பணிக்கேற்ற பாத்திரங்களாக தேவன் தங்களை மாற்றும்படிக்கு தினமும் தங்களை அவரிடம் அர்ப்பணிக்கிறார்கள். தங்கள் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களுக்குச் சேவைசெய்வதற்கான வாய்ப்புகளை தினமும் மேம்படுத்துகிறார்கள். தாங்கள் எங்கு இருந்தாலும், வீட்டில் சாதாரணமான ஒரு வேலையைச் செய்தாலும், வெளிகளத்தில் பயன்மிக்க பணியைச் செய்தாலும் தினமும் தங்கள் எஜமானுக்காகச் சாட்சிசொல்கிறார்கள்.

‘கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்தபோது, ஒவ்வொரு நாளும் கிருபையை புதிதாகப் பெறுவதற்கு தினமும் தம் பிதாவை நாடிச்சென்றார்; இவ்வாறு பிதாவுடன் ஐக்கியத்தைப் பேணி, மற்றவர்களைப் பெலப்படுத்தவும் ஆசீர்வதிக்கவும் புறப்பட்டுச் சென்றார்; இதை அறிவதால், அர்ப்பணிப்புமிக்க ஊழியர்கள் அற்புதமான ஆறுதலைப் பெறலாம்.

‘கிறிஸ்துவின் முன்மாதிரியைப்பின்பற்றுகிற ஒவ்வோர் ஊழியரும் பூமியின் அறுவடை முதிர்ச்சியடைய தேவன் தம் திருச்சபைக்கு வாக்களித்திருக்கிற வல்லமையைப் பெறவும் பயன்படுத்தவும் ஆயத்தமாக்கப்படுவார்.’

‘தேவன் நம் தேவைகளை அறிந்து, அவற்றைப் பூர்த்திசெய்கிறார். தம் பிள்ளைகளின் தேவைகளுக்கு கர்த்தரிடம் ஒரு பொக்கிஷசாலை உண்டு, அவர்களது சகல தேவைகளையும் அவரால் சந்திக்கமுடியும். அப்படியானால் அவரை நாம் ஏன் நம்பக்கூடாது? தம் போதனைகளுக்குக் கீழ்ப்படிவதை நிபந்தனையாக வைத்து, தம் பிள்ளைகளுக்கு விலையேறப்பெற்ற வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார். அவரால் அகற்றமுடியாத பாரம் ஒன்று இல்லை, விலக்கமுடியாத இருள் ஏதுமில்லை, ஆற்றலாக மாற்றமுடியாத பெலவீனம் எதுவுமில்லை, அமைதிப்படுத்த முடியாத பயங்கள் ஏதுமில்லை, பாதுகாப்பாக நடத்தி, நியாயமென விளங்கச்செய்யமுடியாத பயன்மிக்க இலக்கு எதுவுமில்லை.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள் எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அனுபவிப்பதற்கு எவ்வாறு உதவின? பதிலளிக்கப்படாத ஜெபங்கள் உள்ளனவா? அந்த நிலையிலும் எவ்வாறு வாக்களிக்கப்பட்ட சமாதானத்தை அனுபவிக்கலாம்?*
2. *எதைப்பற்றி யோசிப்பதில் நேரம் செலவிடுகிறீர்கள்? பிலி 4:8இன் வெளிச்சத்தில் பதிலளியுங்கள். நீங்கள் சிந்திக்கிற விஷயங்கள் எவ்வளவு தூரம் உங்கள் விசுவாசத்தையும், கர்த்தருடன் நடந்துசெல்வதையும் பெலப்படுத்துகின்றன?*
3. *‘எவ்வளவுக்கு அதிகமாக நம் குறைகளையே யோசிக்கிறோமோ, அவ்வளவுக்கு குறைவாக அவற்றை மேற்கொள்வதற்கான பெலனைப் பெறுவோம்’ என்கிறார் எலன் ஒய்ட். இதன் அர்த்தம் என்ன? மேற்கொள்வதற்கு முக்கிய வழி என்ன?*

# பணக்கார அட்வென்டிஸ்டாக மாறுதல்

சிறுவனான ரெனேவுக்கு அட்வென்டிஸ்டுகள் பற்றிய அனைத்து விஷயங்களும் பிடித்திருந்தன. பிலிப்பைன்ஸில் அவன் வாழும் மாகாணத்தில், பணக்காரர்கள் எல்லாம் அட்வென்டிஸ்டுகளாக இருந்தார்கள். அவர்களுக்கு அதிகமான வயல்கள் இருந்தன, உயர்தர வாழ்க்கை இருந்தது. அதுபோன்ற ஒரு வாழ்க்கைமுறையை ரெனே விரும்பினான்.

ஒருநாள், அட்வென்டிஸ்ட் சிறுவர்கள் ரெனேவிடம் தங்களுடன் சேர்ந்து வேதாகமத்தை வாசிப்பதற்காக அழைத்தார்கள். அவனுடைய அப்பாவுக்கு வேலைகொடுப்பவர் ஒரு அட்வென்டிஸ்ட் விவசாயி, அவருடைய மகன் இவனை ஓய்வுநாள் பள்ளிக்கும் ஆலயத்திற்கும் அழைத்தான். முதன்முறையாக ஓய்வுநாளைப்பற்றிக் கேள்விப்பட்டான். அட்வென்டிஸ்ட் சிறுவர்கள் நன்றாக உடையணிந்திருந்தார்கள். அவர்கள் கெட்ட வார்த்தைகள் பேசவில்லை. அதனால் அவர்களைப்போல இருக்க ஆசைப்பட்டான். 12 வயதில் ஞானஸ்நானம் பெற்று, அட்வென்டிஸ்ட் சபையில் சேர்ந்தான்.

அவன் பணக்காரனாகவில்லை, அவனுடைய வாழ்க்கை மோசமடைய ஆரம்பித்தது. அவன் விசுவாசத்தை காரணம்காட்டி, அவனது குடும்பத்தார் அவனை வெறுத்து, படிப்புக்கு உதவ மறுத்தார்கள். அதனால் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை. நான்கு வருடங்கள் பெரும்பாடாக இருந்தது. 16 வயதில் சபைக்குச் செல்வதை நிறுத்தினான், அந்த அட்வென்டிஸ்ட் விசுவாசியின் வயலில் தன் அப்பாவுடன் சேர்ந்து வேலைசெய்ய ஆரம்பித்தான். குடிக்கவும், புகைக்கவும், சூதாடவும், தீட்டான உணவுகளைச் சாப்பிடவும் ஆரம்பித்தான்.

இரண்டு வருடங்கள் கடந்தன, அப்போது 17 வயது ரோடல் அவனுடைய வீட்டிற்கு வந்தார்.

“நான் ஒரு ஊழியன். உள்ளே வரலாமா?” என்று ரெனேவின் அம்மாவிடம் கேட்டார். “எந்த ஊழியத்தைச் சேர்ந்தவர்?” என்று அவர் திரும்பக்கேட்டார். “1000 ஊழியர்கள் இயக்கத்தைச் சேர்ந்தவன்” என்று ரோடல் சொன்னார். “அது என்ன?” என்று அம்மா கேட்டார். “அது செவந்த் டே அட்வென்டிஸ்ட் சபையைச் சேர்ந்தது” என்று சொன்னார். “அப்படியா, என் மகனும் அட்வென்டிஸ்டுதான், ஆனால் இப்போது ஆலயம் செல்வதில்லை” என்று அம்மா சொன்னார். “அவரை எங்கே?” என்று ரோடல் கேட்டார். “தூங்குகிறான்” என்று அம்மா சொன்னார்.

ரெனே கடினமாக உழைக்கிற விவசாயி, மிகவும் களைத்துப் போயிருந்தார். ரோடலை ரெனெவிடம் அம்மா அழைத்துச் சென்றார். “நண்பா, எதற்கு அட்வென்டிஸ்ட் சபையை விட்டு வெளியேறினீர்கள்?” என்று ரோடல் கேட்டார். ஆனால் தனக்கு அட்வென்டிஸ்ட் சபைக்கு வருவதற்கு ஆர்வமில்லை என்று ரெனே உறுதியாகச் சொன்னார். “நான் அட்வென்டிஸ்டாக மாறினது என் குடும்பத்தாருக்குப் பிடிக்கவில்லை” என்று கூறினார்.

“நீங்கள் சபைக்கு வரவேண்டும்” என்று அழைத்தார். “என்னால் முடியாது” என்று ரெனே சொன்னார்.

ரோடல் சென்றுவிட்டார். ஆனால் ஒன்றரை வருடங்கள் கழித்து, ரெனேவுக்கு 20 வயதானபோது, மீண்டும் அவரைச் சந்தித்தார்.



“நண்பரே, வாருங்கள் மீன்பிடிக்கச் செல்வோம்” என்று அழைத்தார்.

சபைக்கு வரும்படி ரெனேவைக் கட்டாயப்படுத்தவில்லை. அவரை நண்பராக்கினார். இருவரும் சேர்ந்து மீன்பிடிக்கச் சென்றார்கள். சில நாட்கள் கழித்து, ரெனே மீண்டும் ஆலயத்திற்குச் செல்ல ஆரம்பித்தார்.